## எம்.ஜி.ஆர். – ஜெயலலிதா தலைமையில் இயங்கிய

# அ.தி.மு.க. - இப்போது டில்லியின் சொல்படி நடக்கும் நிலைக்கு ஆளாகியுள்ளது!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, மார்ச் 20-

தி.மு.க. ஆட்சியை வீழ்த்த எத்தனையோ சூழ்ச்சிகளை மேற்கொண்டும், தமக்கென்று நம்பத்தகுந்த ஒரு கூட்டணியை அமைத்துக் கொள்ள முடியாமல் தள்ளாடுகிறது. பா.ஜ.க. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவின் தலைமை தாங்கப்பட்ட அ.தி.மு.க.வோ டில்லியின் கட்டளைக்கு அடங்கி விட்டது. ஓயா உழைப்பாலும், ஆட்சியின் அரும்பெரும் சாதனைகளாலும் மீண்டும் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆட்சி அமைவது உறுதி என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டுக்கான தேர்தல் தேதி அறிவித்தாகிவிட்ட நிலையில், எடப்பாடி பழனிசாமி அவர்களின் கட்சியான அ.இ. அண்ணா தி.மு.க.வுடன், பல மாதங்களுக்கு முன்பே, டில்லிக்கு எதிர்க் கட்சித் தலைவரான எடப்பாடியாரை அழைத்து, அங்கேயே கூட்டணி அறிவிப்பினை செய்ய வைத்தார் உள்துறை அமைச்சரும், பா.ஜ.க.வினரால் 'தேர்தல் வித்தகர்' என்று அழைக்கப்படுபவருமான அமித்ஷா.

**வடக்கே பி.ஜே.பி. செய்த வித்தை தமிழ்நாட்டில் எடுபடாது!**

வடக்கே பல மாநிலங்களில் செய்த ''வித்தைகளை'', தமிழ்நாட்டிலும் செய்து, தி.மு.க. கூட்டணி சிதையும் என்ற நம்பிக்கையோடு, வழக்குகளில் ஏற்கெனவே சிக்கியுள்ள சில, உடைபட்ட கட்சிகளின் தலைவர்களை அழைத்தும், பிரதமர் மோடி அவர்கள் இதுவரை இரண்டு, மூன்று முறை தமிழ்நாட்டுத் தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்ததற்குப் பிறகும், எந்தத் தாக்கமும் ஏற்படவில்லை என்பதைவிட, அவர்களது கூட்டணியே - அவர்கள் எதிர்பார்த்தபடி அமையவில்லை என்பது ஊரறிந்த செய்தியாகி விட்டது!

தேசிய ஜனநாயக கூட்டணி (NDA) என்றுதான் அழைக்கப்படுகிறது; பெயரளவில் எடப்பாடி பழனிசாமி அவர்கள், அதற்குத் தலைவர் என்று கூறிவிட்டு, அக்கூட்டணியில் சேரும் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது எல்லாம் பா.ஜ.க.வின் வடநாட்டுத் தலைவர்கள் தான். (அந்தக் கூட்டணியில் உள்ள கட்சிகள் முழு பலமில்லாத கட்சிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது).

அ.தி.மு.க.வோ, சிதறு தேங்காய்போல் ஆகிவிட்டது - தொடக்கத்திலிருந்தே - ஜெயலலிதா அவர்கள் உடல்நலம் குன்றி, மருத்துவமனையிலிருந்த நாள்கள் முதல், வெங்கய்யா (நாயுடு) போன்றவர்கள் (அப்போதிருந்த ஒரு ஒன்றிய அமைச்சர்) மருத்துவமனையிலேயே தங்கி, டில்லிக்கு - பா.ஜ.க.வுக்கு, களநிலவரம்பற்றிக் கூறி, ஜெயலலிதா அவர்கள் மறைந்தவுடன், மோடி வந்து, உடலுக்கு மரியாதை, கட்சிக்காரர்களுக்கு ஆறுதல் சொல்லுவதுபோன்று, பலரது தலையில் 'கை வைத்து', ஆறுதல் கூறியதிலிருந்து, அக்கட்சி- அண்ணா தி.மு.க. - எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியவர்களுடைய கட்சியாக இல்லாமல், டில்லியின் மத்தியஸ்தையே என்றும் கேட்டு, நடக்கும் கட்சியாக பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டது.

**தி.மு.க. கூட்டணியை உடைக்கும் முயற்சி வெற்றி பெறவில்லை!**

கட்சியில் 'பிளவு', பிறகு 'இணைப்பு', பிறகு பற்பல அரசியல் நாடகங்கள், தங்கள் கையில் உள்ள திரிசூல மகிமை எல்லாம் இணைந்து, இன்று அக்கட்சியை ஒரு 'டம்மி' (Dummy) போல் ஆக்கி, வட மாநிலங்களில் கையாண்ட வித்தைகளையே இங்கும் கையாளலாம் என்று கனவு கண்டார்கள் - பா.ஜ.க.வும், அமித்ஷா போன்றவர்களும்!

மாற்றம் வரும்; தமிழ் நாட்டில் மாற்றம் வரும் என்று கூறிய பிரமதர் மோடி முதல், கடைசி பிரச்சாரகர் வரை போட்ட திட்டம் எதுவுமே அவர்களுக்குக் கைகூடவில்லை.

தி.மு.க. கூட்டணியை உடைக்கும் முயற்சியில் தோல்வி மட்டுமல்ல; அங்கே இருந்தவர்கள்கூட இப்போது, தி.மு.க.வில் இணைந்துள்ளனர்.

கடைசியாக ஒரே நம்பிக்கை டில்லிக்காரர்களுக்கு - புதுக்கட்சி ஆரம்பித்து, 'நானே என் தலைமையில், ஆட்சி அமைப்பேன்' என்று கட்டியம் கூறி, களத்தில் காட்சி கொடுக்கும் ஒரு நடிகரை, எப்படியாவது வளைத்து விடலாம்; அதன் மூலம், அவரது ரசிகர் மன்றத்தினரின் வாக்குகளையும் வாரி விடலாம் என்ற முயற்சியில் நம்பிக்கை வைத்தனர்.

அதற்காக, இப்படியும் ஓர் அரசியல் கூட்டணி உருவாக்கமா? என்று நாகரிக அரசியலையே கண்டு பழக்கப்பட்ட தமிழ் நாட்டு மக்கள் பலரும் முகம் சுளிக்கும் அளவில், 'தினமலர்' நாளேட்டிலேயே (அது ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. ஆதரவு - தி.மு.க. எதிர்ப்பு) வெளியிட்டுள்ள ஒரு செய்தி!

**தரம் தாழ்ந்த கூட்டணி முயற்சி!**

இறுதி '..... கூறப்படுகிறது' என்று முடிகிறது. அது உண்மையாக இருந்தால், அதைவிட தரம் தாழ்ந்த கூட்டணி அமைக்கும் முயற்சி அரசியலில் வேறு இருக்கவே முடியாது!

அந்த ஏட்டின் செய்தி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, இதற்காக ஒரு நடிகை பரிந்துரைக்க கேட்டுக்கொள்ள மும்பை சென்றார்'' என்றெல்லாம் செய்தி வந்ததே - பா.ஜ.க.வின் தேசிய ஜனநாயக முன்னணிக்கோ பெருமை தரக்கூடியதா?

அதற்கு இன்றுவரை எந்தவித மறுப்பும் கூறாத நிலையும் தொடர்ந்த போது, நடிகர் திடீர் அரசியல் பிரவேசக் கட்சியை, தங்கள் கூட்டணிக்கு இழுக்க, 90 தொகுதிகள் (234 இல்) இரண்டரை ஆண்டு முதலமைச்சர் பதவி என்றெல்லாம் பேரம் பேசப்பட்டது என்று அக்கட்சியின் பொறுப்பாளர் ஒருவராலேயே அம்பலப்படுத்தப்பட்டு விட்டது!

**பெண்களை இழிவுபடுத்தும் அரசியல்வாதிகள்!**

இறுதியாக, அந்த நடிகர், ''என் தலைமையில் தான் ஆட்சி; யாருடனும் சேரமாட்டோம்'' என்று கூறி, பா.ஜ.க. - அ.தி.மு.க. ஆசையை நிராசையாக்கி விட்டார்!

"காக்கையின் வடையை எதிர்பார்த்த நரிகள் ஏமாந்த கதையாக'' மாறி வருகின்றது!

அதோடு, தமிழ்நாட்டு அரசியல் தளத்தில், தேர்தல் களத்தில் - முன்பு எப்போதும் இல்லாத வகையில், மகளிர் மாண்பைக் குலைக்கும் வகையில், ஆபாச, அருவெறுக்கத்தக்க, அத்துமீறல் பேச்சுகள் அ.தி.மு.க. மற்றும் எதிர்க்கட்சியினர் பேசிய நிலையில், அத்தலைமை, அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா?

அவர்களது வீட்டுப் பெண்கள்கூட அத்தகைய அசிங்கமான அவதூறுகளை ஏற்றுக்கொள்ள மாட்டார்களே!

தி.மு.க. கூட்டணியின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தனது இயக்கத் தவரை, கூட்டணியினரையும் தாண்டி, தனது ஒப்பற்ற உழைப்பினாலும், உயரிய வரலாற்றுச் சாதனைகளாலும் தமிழ்நாட்டு மக்களின் - குறிப்பாக மகளிர், இளைஞர்கள் போன்ற பலதரப்பினரது இதயச் சிம்மாசனத்தில் அமர்ந்துவிட்டார் - புலம் பெயர்ந்து வாழும் மக்கள் உள்பட!

**ஓயாது உழைக்கும் முதலமைச்சர் மீண்டும் ஆட்சி அமைவது உறுதி!**

அவரே ஒருமுறை மனந் திறந்து கூறிய படி, அவரது ''சக்திக்கு மீறி உழைக்கிறார்!'' ஒற்றை என்ஜின் ஆட்சி, பல இரட்டை என்ஜின் ஆட்சிகளின் சாதனைகளை மிஞ்சியதாக - கல்வி, மருத்துவம், மகளிர் உரிமை, இளைஞர் நலன், விளையாட்டு, திறன் வளர்ச்சி போன்ற பல துறைகளில் இந்தியாவின் முதன்மை மாநிலமாக்கியுள்ள கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில், பொருளாதார வளர்ச்சி 11.9 சதவிகித அளவிற்குத் தமிழ் நாட்டினை உயர்த்திய சாதனை வரலாறு காணாதது!

தி.மு.க. கூட்டணி என்ற மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியான கொள்கைக் கூட்டணியை, என்.டி.ஏ. என்ற ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க., அ.தி.மு.க. கூட்டணியால் தோற்கடிக்க முடியாது; பிரதமர் மோடியும், அமித்ஷாக்களும், அவர்களது அடிமைகளும் எத்தனை முறை தமிழ்நாட்டிற்கு வந்து முயற்சித்தாலும் வெல்ல முடியாது என்றயதார்த்தத்தை உணர்ந்ததால், கடைசி நேரத்தில் ஒரு முகபடாம், ஒப்பனை செய்ய முயற்சித்தனர் - 'கோச்' வண்டி குதிரையின் கூட்டு கிடைக்குமா? என்று எதிர்பார்த்து, ஏமாந்த நிலை எதைக் காட்டுகிறது? தி.மு.க. கூட்டணி வெற்றி பாதையில் செதுக்கப்பட்ட கல்வெட்டு என்பதைத் தானே!

'ரேஸ் குதிரைகள் கூட்டணியை' வெறும் 'பொய்க்கால் குதிரை', 'ஜட்கா குதிரை', 'கோச் வண்டி அலங்கார குதிரை' கள் ஆகியவை அத்தனையும் சேர்ந்தாலும், தேர்தல் ரேசில் வெல்ல முடியாது என்ற புரிதல் வெளிச்சத்திற்கு வந்துள்ளதைத்தான், கடந்த சில வார அரசியல் நடவடிக்கைகள் உலகுக்கு உணர்த்துகின்றன!

மிரட்டல், அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் திடச்சித்தமுள்ள காரணத்தால், தமிழ்நாட்டை, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் உள்ள கொள்கைக் கூட்டணியே வென்றெடுப்பது உறுதி! உறுதியிலும் உறுதி!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தருமபுரி மேற்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் நடைபெற்ற மேற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் சட்டமன்ற தேர்தல் பணிகள் தொடர்பாக கழகதலைவர் – முதலமைச்சர் அவர்கள் கழக நிர்வாகிகளுக்கு வழங்கிய அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் குறித்து விளக்கி பேசினார்.கூட்டத்தில் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி, தொகுதி பார்வையாளர் அரியப்பன் மாநில,மாவட்ட நிர்வாகிகள் கே.மனோகரன்,கூடப்பட்டி சுப்பிரமணி,முருகன்,ரமேஷ்.ராஜகுமாரி,ஒன்றிய செயலாளர்கள் எம்விடி.கோபால், சரவணன், பிரபுராஜசேகரன், பி.கே.அன்பழகன், முத்துகுமார், சக்திவேல், முனியப்பன், பேரூர் கழக செயலாளர்கள் பி.கே. முரளி,சீனிவாசன்,மூத்த வழக்கறிஞர் சந்திரசேகர் உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்,தேர்தல் பணிக்குழுவினர் கலந்து கொண்டனர்.

அ.தி.மு.க.வை சார்ந்த துறைமுகம் சட்டமன்ற தொகுதி, வார்டு 56க்கு உட்பட்ட இளைஞர்கள் மற்றும் ராஜேஸ்வரி, எஸ்.சந்தியா, ஏ.சதா, சி.திலேகா, கே.அஞ்சலி, ஆர்.அரவிந்தன், ஏ.பரத், எம்.தோனி, கே.ஷ்யாம், எஸ்.சஞ்சய், இ.அஜித், இளையராஜா, தனா, பாரதி, ஜனனி, திவ்யலட்சுமி, பொம்மியம்மாள், அமுல், கமலி, பிரதீபா, தமிழ்செல்வி, முத்தழகி, ஸ்டெல்லா, ஆசிபா, தினேஷா, தனலட்சுமி, ஆகியோர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் அக்கட்சியில் இருந்து விலகி திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வின் போது மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் ஏ.ராதா, பி.அசோக் குமார் மற்றும் கல்லூரி மாணவர்கள் உடன் இருந்தனர்.

## விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கில்

# குற்றவாளி கைது! உச்சபட்ச தண்டனையை உறுதி செய்வோம்!

### கனிமொழி கருணாநிதி எம்.பி. உறுதி!

சென்னை, மார்ச் 20-

விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கு குறித்து, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கு குறித்து, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளது வருமாறு:

விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கில் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு, குற்ற வாளியைக் கைது செய்துள்ளது தமிழ் நாடு காவல்துறை. அச்சமூக விரோதி உச்சபட்ச தண்டனைப் பெறுவதை உறுதிசெய்வதோடு, பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்திற்கு உரிய நீதி கிடைக்கவும், இத்துயரிலிருந்து மீண்டு வரவும் துணையாக இருப்போம்.

குற்றவாளிகளைத் தண்டிப்பதை சட்டம் உறுதி செய்யும். ஆனால், குழந்தை களுக்கும் பெண்களுக்கும் பாதுகாப்பான சூழலை ஒரு சமூகமாக நாம் அனைவரும் சேர்ந்தே உறுதிப்படுத்த முடியும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆலோசனை வழங்கி சிறப்புரை !

# பல்லாவரம் தொகுதியில் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம்!

### இ. கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமை!

பல்லாவரம் மார்ச் 20-

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்லாவரம் வடக்கு பல்லாவரம் தெற்கு செம்பாக்கம் வடக்கு பம்மல் வடக்கு பகுதி பம்மல் தெற்கு பகுதி புனித தோமையார் மலை ஒன்றியம் பொழிச்சலூர் ஊராட்சி திரிசூலம் ஊராட்சி சென்னை மாநகராட்சி 159 வார்டு ஆகிய பகுதிகளை கொண்ட பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மேற்கண்ட பகுதிகளில் நியமிக்கப்பட்டுள்ள 468 வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) வாக்குச்சாவடி கணினி முகவர்கள் (BDA) 10 பூத் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்த ஆலோசனைக் கூட்டம் இன்று (20.3.2026 வெள்ளிக் கிழமை) காலை 10 மணி அளவில்குரோம்பேட்டை ஜிஎஸ்டி ரோட்டில் அமைந்துள்ள வசந்தம் திருமண மண்டபத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ., தலைமையில் பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவர் வே.கருணாநிதி வரவேற்பில் பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை பம்மல் வடக்கு பகுதி கழகச் செயலாளர் த. ஜெயக்குமார் பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ.எஸ். பெர்னார்ட் செம்பாக்கம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் புனித தோமையர் மலை ஒன்றிய கழகச் செயலாளர் ஜி. கே. ரவி என்கிற விவேகானந்தர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள கலந்த ஆலோசனைக் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்.

மேலும் கழகத் தீர்மானக் குழுச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மீ. ஆ வைத்தியலிங்கம் மாநகரச் செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்எல்ஏ. தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி துணை மேயர் கோ. காமராஜ் பல்லாவரம் தொகுதி பார்வையாளர் ரபி அஹமத் தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர்கள் அ. தமிழ்மாறன் என் நவீன் பொதுக்குழு உறுப்பினர் மு. ரஞ்சன் மாநகரத் துணைச் செயலாளர் இரா. நரேஷ் கண்ணா எம்.சி. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

இக்கூட்டத்தில் ஒன்றிய பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர் வட்டக் கழக நிர்வாகிகள் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் வாக்குச்சாவடி கணினி முகவர்கள் 10 பூத் ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்குமாறு வலியுறுத்தி துண்டறிக்கை வழங்கப்பட்டுள்ளன வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது இறுதியில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன் நன்றி கூறுகிறார்.

## திருவொற்றியூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில்

# வட்டச் செயலாளர்கள் - பாக முகவர்கள் பி.எல்.ஏ.-2 ஆலோசனை கூட்டம்!

### பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு எம்.சி. அறிக்கை!

சென்னை, மார்ச். 20-

திருவொற்றியூர் கிழக்குப் பகுதிச் செயலாளரும் 1வது மண்டலக் குழுத் தலைவருமான தி.மு.தனியரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அறிவிப்பின் படி திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் பகுதி அவைத்தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி தலைமையில் நாளை (21.3.2026 - சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் வட்ட செயலாளர்கள் பாக முகவர்கள் BLA 2 ஆலோசனைகூட்டம் நடைபெறும்.

இதில் திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் தி.நகர் எஸ்.மோகன் பங்கேற்க உள்ளார்.

ஆகையால் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி அணியின் நிர்வாகிகள் கலந்து கொள்ளும் படி கேட்டுகொள்கிறேன்.

இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளர் தி.மு.தனியரசு எம்.சி. தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவேற்காடு நகர திமுக சார்பில் ஆலோசனைக் கூட்டம் நகர கழக செயலாளர் என்.இ.கே.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்துகொண்டு எதிர்வரும் சட்டமன்ற தேர்தல் பணிகள் மேற்கொள்வது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் பிரபு, பொதுகுழு உறுப்பினர் எஸ்.சங்கர், நிர்வாகிகள் ஏ.ஜெ.பவுல்,வழக்கறிஞர் பெ.வினோத், பெஞ்சமின், குமாரசாமி, நடராஜ், பானுஅரசு, ஜெ.சரவணன், ஜோதிநாதன், செல்லதுரை, பாண்டுரங்கன், குமார், கெஜா, துரைகோபால் , கே.பி.எஸ்.சுதாகர் , பிரதானம், தெய்வசிகாமணி, மா.விநாயகம், ரங்கதுரை, பரிசமுத்து, பொன்.மனோகர், இளங்கோவன், சத்தியகிரி, பி.வி.கே.கண்ணன், எம்.காந்தி, பி.பன்னீர்செல்வம், சாது, உமாபதி, ஜெகன், ஐ.ஜேக்கப், டி.பிரியாகுமார், ஆசை தம்பி, என்.ராஜ், அப்பு(எ)ஜெபராஜ், ஆ.நாராயணன், நரேஷ், குடியரசு, உள்பட பலர் உள்ளனர்.